# தமிழ் மாணவர் மீதான தாக்குதல்களைக் கண்டித்து மட்டக்களப்பில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி!

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 22 இதழ் 54
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை 04 — 04 — 1992

(மட்டுநகர்)
தமிழ் மாணவர்கள் மீது இராணுவத்தினர் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து, மட்டக்களப்பில் பாடசாலை மாணவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தியுள்ளார்கள்.
கடந்தமாதம் 25-ம் திகதி ஏறூவூர் தமிழ் வித்தியாலயத்

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ். செயலகம் இல. வங்கிக்கு கடன் வழங்கியது

[யாழ்ப்பாணம்]
இலங்கை வங்கிக்கு யாழ். செயலகம் 13 லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது!
ஓய்வூதியம் பெறுபவர்களின், பங்குனி மாதப் பணத்தை வழங்குவதற்கு தம்மிடம் போதிய பணம் இல்லையென்று யாழ். இலங்கை வங்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு 'மொஸாட்' உதவி வழங்கவில்லை!

(புதுடில்லி)
விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு, இஸ்ரவேல் உதவி புரிகின்றது, என்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை இஸ்ரவேலின் வெளியுறவு அதிகாரி மறுத்துள்ளார்.
இந்தியாவுக்கு தற்போது விஜயம் ஒன்றை மேற்கொண்

(4ம் பக்கம் பார்க்க

# ★ ஸ்ரீலங்கா படையினர் புலிகளை எதிர்கொள்ள புதிய போர்முறை குறித்து ஆராய்வு?

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு ஸ்ரீலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது. மணலாறு மாவட்டத்தில் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களில் போர் டாங்கிகளின் தாக்குதல்களை புலிகள் செயலிழக்கச் செய்ததனாலேயே இந்த மாற்றங்கள் கொண்டுவரப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மணலாறு மோதலில் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் டாங்கி எதிர்ப்பு பீரங்கி உட்பட பல நவீன ஆயுதங்களைக் கைப்பற்றியிருப்பது பாதுகாப்பு அதிகாரிகளிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாம்.
சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டாங்கிகளின் உதவியுடன் புலிகளை எதிர்த்துப் போராட ஸ்ரீலங்கா படையினர் டாங்கிப் படையொன்றையும் உருவாக்கியிருந்தனர்.
ஆனால் மணலாறு மோதல்

[4ம் பக்கம் பார்க்க]

## டாங்கிகளை அழிப்பதில் புலிகள் சிறப்புப் பயிற்சி!
### — இராணுவ அதிகாரி தகவல்

(கொழும்பு)
இலங்கை இராணுவத்தின் டாங்கிப் படையை எதிர்த்து அழிப்பதற்கு விடுதலைப்புலிகளின் விசேட பிரிவொன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்தவர் கைது

[சென்னை]
விடுதலைப் புலிகளின் தமிழ் ஈழக் கோரிக்கை அங்கீகரிக்கப்படவேண்டுமெனக் கோரி சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட கோவை மாவட்டம் காந்திபுரம் இளைஞர் ஒருவர் தமிழக பொலிசா

(4ம் பக்கம் பார்க்க)

## கட்டுநிதி உரிய காலத்தில் கிடைப்பதில்லை!

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்கு மாகாண சபையிடமிருந்து கட்டுநிதி பெறும் யாழ். மாவட்டத் திணைக்களங்களுக்கு உரிய காலத்தில் கட்டுநிதி கிடைப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
யாழ். மாவட்டத் திணைக்களங்களின் சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் அவசரக் கொடுப்பனவுகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.
இதேவேளை திணைக்களத்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் நிலைப்பாடு புலிகள் - அரசு பேச்சுக்களை குழப்பக்கூடாது

[கொழும்பு]
''விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைத் கைது செய்தல், மற்றும் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தல் போன்ற இந்திய அரசின் நடவடிக்கைகள் இலங்கையில் புலிகள் - அரசுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை

(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)
க. பொ. த. (சாதாரண) பரீட்சை முடிவுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படுமென பரீட்சை ஆணையாளர் ஆதர்வெதமுல்ல தெரிவித்தார்.
1991ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ.

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழ் மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடமில்லையென தமிழக அரசு அறிவிப்பு!

(சென்னை)
இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு தமிழகத்திலுள்ள கல்லூரிகளில் இடமளிப்பதில்லையென தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
தமிழக சட்டப்பேரவையில் கல்வி அமைச்சர் திரு. சி. அரங்கநாயகம் இத்தகவலைத் தெரிவித்தார்.
இதையடுத்து தமிழகத்தின் பல பாகங்களிலும் கல்வி கற்கும் சுமார் 30,000 இலங்கைத் தமிழ் மாணவர்களதும் நிலை கேள்விக் குறியாகவே உள்ளது.
தமிழக ஹோட்டல்களிலும், தங்கும் விடுதிகளிலும் இலங்கைத் தமிழர்க்கு இடமளிக்கவேண்டாமென கடந்த வாரம் முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டிருந்ததும் தெரிந்ததே. (சி)

## படையினரின் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பம்!

(கொழும்பு)
வடபகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையினை படையினர் மீண்டும் ஆரம்பித்துள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் கொழும்பில் தெரிவித்துள்ளது.
இப்பணிக்கென மேலதிகமாக 2,000 படையினர் ஈடு

(4ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளருக்கு 1000 ரூபா சம்பள அதிகரிப்பு

[கொழும்பு]
பத்திரிகையாளர்களின் சம்பளம் மாதம் ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக 'சம்பள நிர்ணய சபை' அறிவித்துள்ளது.
பத்திரிகையாளரின் அடிப்படைச் சம்பளத்தை மாதம் ஆயிரம்ரூபாவால் அதிகரிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை பத்திரிகையாளர் தொழிலுக்கான சம்பள நிர்ணயசபை நேற்றுமுன்தினம் கூடி ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.
இத்தீர்மானம் உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் மேற்படிசபை அறிவித்துள்ளது. (சி)

## சிறிமாவோ தாக்கல்செய்த வழக்கு தோல்வி

(கொழும்பு)
'சண்டே ஒப்சவர்' பத்திரிகைக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தாக்கல் செய்திருந்த மானநஷ்ட வழக்கு தோல்வியடைந்துள்ளது.
திருமதி சிறிமாவை படுமோசமாகக் கண்டித்து 'சண்டே ஒப்சவர்' பத்தி

[4ம் பக்கம் பார்க்க]

## கடைகள் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
புத்தாண்டுப் பண்டிகையை முன்னிட்டு பொதுக்கள் வசதிக்காக 4ம், 5ம், 11ம், 12ம் திகதிகளான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். வர்த்தக நிலையங்கள் வியாபாரத்திற்காக திறந்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளன,

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோவில்களுக்குத் தேவையான சிங்க வாகனம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். ந. தருமராசா (M. G R.) 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [சி-6112]

### தவறிவிட்டது

முக்கியமான கையேட்டுப் பதிவுப் புத்தகம் 30-ந் திகதி காலை சிவலிங்கப்புளியடிக்கும் ஐந்து சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்பெசல் இஞ்சினியரிங் வேர்க்ஸ், முட்டாசுக் கடைச்சந்தி, யாழ்ப்பாணத்தில் அல்லது 21, ஒட்டுமடம் வீதி, ஒட்டுமடம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-6115)

### மீரா வெளியீடுகள்

உயிரோட்டமான நாவல்கள் 'ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்' 'முள்முடி மன்னர்கள்' 'அக்கினி, 'விடியலைத்தேடி' யாழ்ப்பாணம், சுன்னாகம். சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, நெல்லியடி, கிளிநொச்சி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (சி-6117)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 (1991) புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 04- 04- 92 சனி மு. ப. 7 - மு. ப. 11 நேரங்களிலும் ஒவ்வொரு சனியும் பரீட்சை நடைபெறும். Paper Class சனி, ஞாயிறு 9.00 - 11.00 நடைபெறவிருக்கிறது. தகுதியான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம், 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-61 2)


## விசேட கூட்டம்

(கொழும்புத்துறை]

கொழும்புத்துறை வசந்தபுரம்விண்மீன்சனசமூகநிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று 4ம் திகதி சனிக்கிழமை பி ப. 3-30 மணிக்கு நிலைய மண்டபத்தில் திரு. செ. ஞேகநாதன் தலைமையில் நடைபெறும். [154]

## நியமனம்

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச சபையின் (உ. அ. அதிபர்) செயலாளராக திரு. கே. குணராசா ஏப்பிரல் 1ம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். (154)

# அகதிக் குழந்தை கப்பலில் மரணம்

(திருகோணமலை)

தமிழகத்திலிருந்து அகதியாக வந்த இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று சுகவீனமுற்று கப்பலில் இறந்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: இக் கப்பலில் 97 குடும்பங்களைச் சேர்ந்த 1275 அகதிகள் வந்தனர். இவர்களைக் ஏற்றி வந்த கப்பலில் உள்ள நான்கு இயந்திரங்களில் மூன்று இயந்திரங்கள் பழுதுபட்டமையால், சப்பல் துறைமுகத்துக்கு தாமதித்து வந்ததுதான் இக் குழந்தையின் மரணத்துக்கு காரணமாக இருக்கலாம் என தெரியவருகிறது.

குழந்தை திருகோணமலையில் அடக்கம்செய்யப்பட்டது. (சு)

# ஒரு பட்டதாரியை உருவாக்க பலர் வரி செலுத்துகிறார்கள்

(கொழும்பு)

இன்று பல்கலைக்கழகங்களில் ஒரு மாணவனை பட்டதாரியாக உருவாக்குவதற்கு 50 ஆயிரம் ரூபா செலவாகின்றது. ஒரு மருத்துவபட்டதாரியாக உருவாக்க ஒரு லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா செலவாகின்றது. ஒரு பொறியியல் பட்டதாரியை உருவாக்க ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா செலவாகின்றது.

இவ்வாறு பல்கலைக்கழக மானியக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்சுண அலுவிகார கருத்தரங்கொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது: இன்றைய பாடசாலைக் கல்விமுறை மாணவர்களுக்கு அவர்கள் எதிர்காலத்துக்குரிய கல்வி முறையாக அமையவில்லை.

ஒரு பட்டதாரி படிப்பதற்கு சாதாரண தொழிலாளி முதல் வருமானவரி செலுத்துபவர் வரை வரியாகப் பணம் செலுத்துகிறார்கள் என்றார். (சு)

# டிப்ளோமா பயிற்சி விண்ணப்பம்கோரப்படுகிறது

(உடுவில்)

மருதனமடம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இசைக் கலைமாணி நாட்டியக் கலைமாணிடிப்ளோமாபயிற்சிநெறி பயில்வதற்கு விண்ணபபங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் அவற்றுள் ஒன்றாக கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியம் சித்தியடைந்த 25 வயதுக்குட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். வ—இலங்கை சங்கீதசபையினரால் நடாத்தப்படும் தரம் 4 பரீட்சையில் சித்தியடைந்து க. பொ. த. (உ. த.) சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் ஏப்ரல் 30ம் திகதியாகும். (109)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்;

அளவெட்டி விநாயகர் அணியை எதிர்த்து பாரதி அணி மோதும். இன்று பி. ப. 3 மணிக்கு இப்போட்டி சுன்னாகம்ஸ்கந்தா கல்லூரியில் நடைபெறும்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை கூட்டுறவு நலன் வருத்திச்சங்கத்தின பொதுக்கூட்டம் இன்று 4ம் திகதி சனிக்கிழமை வெளிநோயாளர் பகுதி மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

## இராசிபலன்

4/04/1992

சனிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 22)

பிரதமை மு. ப. 11-21 வரை; அச்சுவினி முழுவதும் சித்தயோகம், இராகுகாலம் காலை 9-09 முதல் 10-39 வரை சுபநேரம் மாலை 3-09 முதல் 4-39 வரை.

மேடம்; மனமகிழ்ச்சிகாரிய வெற்றி, வாகனசுகம்.

இடபம்: மதிமயக்கம், குடும்ப கலகம், காயம்.

மிதுனம்: முயற்சி வெற்றி, மரியாதை, வியாபார பலிதம்.

கடகம்; மகிழ்ச்சியான கனவு, வசதிவாய்ப்பு. குடும்ப சுகம்.

சிங்கம்; பணநெருக்கடி, நச்சரிப்பு, உடல் உபாதை,

கன்னி; மனப்பிணக்கு, குணப்போக்கில் மாறுதல், வெறுப்பு.

துலாம்; சகோதர உதவி, அதிகாரம், கடன்வசூல்.

விருச்சிகம்; பொருளாதார வாய்ப்பு, இல்லச்சிறப்பு, பெருமை.

தனுசு: பெரும் துன்பம், பயணதொல்லை, நிம்மதிக் குறைவு.

மகரம்: வேலையால்தொல்லை போஜன குறைவு, பயம்,

கும்பம்: தூக்கக்குறைவு, தொழில் பாதிப்பு, போராட்டம்.

மீனம்: உறவினர் பகை, வாக்கு கலகம், தவறான செயல்.

—ஜோஸ்யர்

# கொழும்புவிடுதிகளில்தொற்றுநோய்

(பண்டத்தரிப்பு)

கொழும்பு நகரில் தமிழ்மக்கள் வாடகைக்குத்தங்கியிருக்கும் விடுதிகளில் (லொட்ஜ்) அம்மைநோய் வேகமாகப் பரவி வருகின்றது.

வெளிநாடு செல்வதற்காக இங்கு தங்கியிருப்போரும்இந்த நோயினால் பீடிக்கப்பட்டுவருவதால் அவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாத சம்பவங்களும் அதிகரித்துள்ளது. இதேவேளை இந்த விடுதிகளில் சுகாதார சீர்கேடுகளும் பெருமளவு காணப்படுகின்றன. இதனால் தொற்று நோய்கள் பரவிவருகின்றன. (72)

# கொம்படி ஊரியான் பாதை போக்குவரத்து பாதிப்பு

(பண்டத்தரிப்ப)

கொம்படி—ஊரியான் கடற் பாதையில் தண்ணீர் வற்றி வரிவதால் அப்பாதை வழியாக பிரயாணம் செய்யும் வள்ளங்கள் அடிக்கடி தரை தட்டி நிற்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரயாணிகள் கீழே இறங்கி தள்ளிவிட்டே பிரயாணத்தை தொடரவேண்டியுள்ளது. இன்னும் இருவார காலத்தில் வள்ளச் சேவை தண்ணீர் பற்றாக்குறையினால் ஸ்தம்பித நிலையை அடையலாம் என்று அறியப்படுகின்றது. (72)

## ஞான ஒடுக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பொது நிலைப் பிரான்சிஸ்கன் சபையினருக்கான ஞானஒடுக்கம் அண்மையில் நடைபெற்றது.

மூன்று சிறப்பான திருவுரைகள் அனுபவமுள்ள குருமார்களால் வழங்கப்பட்டதும் திருப்பலியுடன் ஞான ஒடுக்கம் வெகுசிறப்பாக இடம் பெற்றது.

## கருந்தரங்கும் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

சிறிய பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கும் செயலமர்வும் இம் மாதம் 11, 12, 16, 18ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்குகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர் கல்விமான்களும் பங்குபற்றுகின்றனர்.

ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (சு)


1.04.1992 முதல் அமுலுக்கு வரும்

**TASTY பொருட்களின்**

ஆகக்கூடிய சில்லறை விலை விபரங்கள்

| பொருட்கள்: | விலை ரூ. ச. |
|---|---|
| **(1) ஊறுகாய் (Pickles) வகைகள்** | |
| தேசிக்காய் - பக்கற் | 38-50 |
| போத்தல் | 45 00 |
| மிக்ஸ்ட் மலே (Mixed Malay) | 45-00 |
| உள்ளி (250 g) | 62-50 |
| **(2) சட்னி (Chuttney) வகைகள்** | |
| மாங்காய் | 45-00 |
| தக்காளி | 45-00 |
| **(3) ஜாம் (Jam) வகைகள் (450 g)** | |
| ஸ்ரோபறி, மிக்ஸ்புறுட், விளாம்பழம் | 50-00 |
| தக்காளி | 45-00 |
| **(4) சாக்கிலேட் (Chocolates) வகைகள்** | |
| கொக்கோநட் | 3-00 |
| கிரஞ்சீஸ் | 2-50 |
| கோகனட் மஞ்ச் | 1-50 |
| கிறீஸ்பி | 14-00 |
| Toffo | 1-00 |
| **(5) சோஸ் (Sauce)** | |
| தக்காளி, மிளகாய் (325 ml) | 45-00 |
| **(6) பழரசப்பானம் (Fruit Nectors)** | |
| எலுமிச்சை, தோடம்பழம் | 9-00 |
| நன்னாரி, திராட்சை | 11-00 |
| **(7) கோடியல் (Cordials)** | |
| நெல்லிரசம் 625 ml | 55-00 |
| ,, 750 ml | 67-50 |
| தோடம்பழம் 750 ml | 75-00 |
| ஸ்ரோபறி 750 ml | 55-00 |
| [வாசனையூட்டப்பட்டது] | |

பாவனையாளர்களின் நன்மை கருதி

எமது விற்பனை நிலையம்

**04-04-1992 முதல்**

பின்வரும் முகவரியில் இயங்கவுள்ளது:

**ஆ. வேலுப்பிள்ளை & சன்**

50, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

**Taste Line Industries [Pvt] Ltd.**

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(எ-2054)



பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி

**விரிவுரை கலைமாணி (இறுதி வருடம்) 1993 ஏப்ரல்**

மேற்படி பாடநெறிக்கான விரிவுரைகள்

**11-4-92ல் ஆரம்பமாகின்றன**

அண்மையில் வெளிவந்த பரீட்சை முடிவுகளில் சித்தியடைந்த மாணவர்களில் எமது கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களே அதி திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உதவிப் பதிவாளர்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-6121)

# தமிழர் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் ஒரேஇயக்கம் விடுதலைப்புலிகள்தான்

## அமைச்சர் தொண்டமான் பேட்டி

(கொழும்பு)

''தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக மக்கள் மத்தியில் நின்று போராடிக்கொண்டிருக்கும் ஒரே இயக்கம் விடுதலைப் புலிகள்தான்'' என்று இ.தொ.கா. தலைவரும், கிராமிய கைத்தொழில், உல்லாசப்பயணத் துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: விடுதலைப்புலிகள் மாத்திரமே இன்று களத்தில் நிற்கிறார்கள். தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் இயக்கம் என்ற வகையில் அவர்களை மக்களிலிருந்து பிரித்து இனம் காணமுடியாது.

இதேவேளை புலிகளைஒழித்து விடுவதன் மூலம் தமிழர் பிரச்னைக்குத்தீர்வு கிடைத்து விடுமென்று எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில்தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாதவரை, தமிழ்மக்கள் இருக்கும் வரை இத்தகைய இயக்கங்கள்இருப்பது தவிர்க்க முடியாதது.



இதுவரை எத்தனையோ பேச்சுவார்த்தைகள், சமாதான தூதுக்குழுக்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு நடைபெற்றபோதும் புலிகள் தமது ஈழக்கோரிக்கையைக் கைவிடவில்லை. சமாதான முயற்சிகளும், சந்திப்புகளும் மாறிமாறி நடைபெறுகின்றதேயொழிய புலிகள் ஈழக் கோரிக்கையைச் கை விட்ட தான அறிவிப்பு இன்னும் வெளிவரவில்லை. எனவே முன் வைக்கப்படும் தீர்வு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக ஈழக் கோரிக்கைக்கு மாற்றீடாக அமைய வேண்டும்.

புலிகள் பிரச்னைக்குள், பெரும் நெருக்கடிக்குள் இருக்கின்றனர். இதனைச் சாதகமாகக் கொண்டு அவர்களை வழிக்குக்கொண்டு வரலாம். தீர்வைச் சுமத்தி ஏற்றுக் கொள்ளச் செய்துவிடலம் என்றெல்லாம் கருத்து நிலவுகின்றது. இது சாத்தியமாகக்கூடிய தொன்றல்ல.

மலையகத்தில் புலிகள் என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதைகள். இந்திய வம்சாவழி மக்கள் தமது உரிமைகளை அனுபவித்துவிடக்கூடாது. அவர்கள் தொடர்ந்தும் பின் தங்கிய நிலையிலே இருக்க வேண்டுமென தொடர்ந்தும் எதிர்பார்க்கும் சிலசக்திகளின் செயற்பாடுகளே இவையன்றி வேறில்லை. (ரி)

## விசர்நாய்க் கடியிலிருந்து மக்களைபாதுகாக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய் கடியின் தாக்கம், பாதிப்புக்களிலிருந்து எமது மக்களை நாம் காப்பாற்றிக்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு அவை செயலாக்கம் பெறச் செய்ய வேண்டும் இவ்வாறு ''விசர் நாய்கடிகளின் பாதிப்பும் அதற்கான எதிர்கால உடன் நடவடிக்கையும்'' என்ற தலைபபில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அறவழிப் போராட்டக்குழு நிர்வாக இயக்குநர் திரு. க. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு திரு. சி.வீ.கே. சிவஞானம்தலைமையில் நடைபெற்றது.

திரு. ஜீவகதாஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:- முன் எப்போதும் இல்லாத வகையில் இப்போது விசர் நாய் கடியினால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. விசர் நாய் கடியில் இருந்து எவ்விதம் தப்பித்துக் கொள்வது என்பதுபற்றிய அறிவு பொது மக்களிடத்தில் போதாமலிருக்கின்றது.

மாநகர மற்றும் நகரப் புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு விசர்நாய்கடி பற்றிய விழிப்புணர்வு ஓரளவு இருக்கிறது படிப்பறிவற்ற மக்கள் இப்பிரச்சனையால் பாதிப்புக்குளாகிவருகின்றனர்.

கிராமங்களில் விசர்நாய்கள் நடமாட்டம் மிக அதிகளவில் காணப்படுகின்றன. விசர்நாய் கடியின் பாதிப்புகள் இன்று எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு விதப்பட்ட பிரச்சினைகளுக்குள்ளும் முக்கியமானதாக கருதப்படுகின்றது

## சுப்பசொனிக் விமானத்தால் கொழும்பில்தொடர்ந்தும்பீதி

(கொழும்பு)

அரசு சீனவிலிருந்து கொள்வனவு செய்துள்ள 'சுப்ப சொனிக்' - யுத்த விமானங்களால் கொழும்பு மாநகர்ப் பகுதி தொடர்ந்தும் பீதியில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரிய குண்டுகள் வெடிப்பது போன்ற சத்தங்கள் தற்போது தினமும் கேட்பதாகவும் இது யுத்த விமானத்தின் ஒலி என்பதை நம்ப தற்போது மக்கள் தயங்குவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான சத்தம் இடம் பெறுதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமென கூட்டுப் படைத் தலைமையகம் உறுதியளித்தபோதும் தொடர்ந்தும் இச் சத்தத்தால் மக்கள் மத்தியில் ஒருவித அச்சம் பரவிவருவதாக பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. (சி)

## வணிகதீபம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் 'வணிகதீபம்' என்ற கையெழுத்துப் பத்திரிகையின் மூன்றாவது இதழ் வெளியீட்டு விழா செல்வி தி. சுகந்தினியின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இப் பத்திரிகையை கைதடி கொத்தணி அதிபரும், பாடசாலையின் அதிபருமாகிய செ. நா. சத்தியநாதன் வெளியிட்டு வைத்தார்.

மன்றப் பொறுப்பாசிரியர் பசுபதீஸ்வரன் உட்பட ஆசிரியர் நா. ஸ்ரீதரன், ஆசிரியர் செ. பேரின்பநாதன், மாணவர்கள் சார்பில் செல்வி ஆ. இரத்தினம்பாள், செல்வி ச. அனுஷா, செல்வன் கோ. ஜீவபாலன் ஆகியோர் உரையாற்றினர். (சு)

## இலங்கைப் படையினருக்கு சீன விமானிகள் பயிற்சி

(கொழும்பு)

சுப்பசொனிக் யுத்த விமானங்களில் இலங்கை விமானப் படையினருக்கு சீன விமானிகளே பயிற்சியளித்து வருகிறார்கள்.

கடந்த சில வாரங்களாக பல சீன விமானிகள் இவ்வாறு பயிற்சியளித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானப் படையைச் சேர்ந்த 30ற்கும் மேற்பட்ட விமானிகள் இப் பயிற்சியில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (சி)

## வாராந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிறு தோறும் இடம் பெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10-00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இவ்வார அமர்வில் திரு. செம்பியன் செல்வன் அவர்கள் 'எனது கலை இலக்கிய அனுபவங்கள்' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

## மூன்றுகால்களுடன் பிறந்த பெண் குழந்தை

(ஜொகனஸ்பேர்க்)

உலகத்தில் முதல் தடவையாக, மூன்று கால்களுடன் பெண் குழந்தையொன்று தென்னாபிரிக்காவில் பிறந்துள்ளது.

தென்னாபிரிக்காவிலுள்ள 'யாபேன்' என்ற ஊரில் பெண் ஒருவர், வைத்திய சாலையில், மூன்று கால்களுடன் பெண் குழந்தை ஒன்றை பிரசவித்தாா.

இந்த குழந்தையின் மூன்றாவதுகால், அதன் முதுகுப் புறத்துடன் பிணைக்கப்பட்டிருந்தது. இந்த அதிசயக் குழந்தை பிறந்த செய்தி காட்டுத்தீபோல் அந்த ஊர் முழுவதும் பரவியதைத் தொடர்ந்து அக்குழந்தை பிறந்த வைத்தியசாலையை மக்கள் சூழ்ந்து கொண்டு, இந்த ஊரை அழிக்கப் பிறந்த பேய், இதை உடன் கொன்றுவிடும்படி அக்குழந்தையின், தாயையும், வைத்தியசாலை டாக்டர்களையும் கட்டாயப்படுத்தினார்கள்.

இக்குழந்தையின் தாய், தனது ஊர்மக்களிடம் தன் குழந்தையை கொல்ல வேண்டாம் என எவ்வளவோ கெஞ்சி மன்றாடியும், எதுவித பலனும் கிட்டாததைக் கண்ட டாக்டர்கள், உடனடியாக அக்குழந்தையின் மூன்றாவது காலை சத்திர சிகிச்சை மூலம் அப்புறப்படுத்திவிட்டு பொது மக்களுக்கு காண்பித்தார்களாம். அதன்பின்பே மன நிம்மதியடைந்த அந்த ஊர் மக்கள் வைத்தியசாலையை விட்டு அகன்றார்களாம். [வி]

## வெளிநாட்டு தூதரகங்கள் பல லிபியாவில் தீக்கிரையாகின

(திரிபொலி)

லிபிய தலைநகர் திரிப்பொலியில் பல வெளிநாட்டு தூதரகங்கள் தாக்கப்பட்டு சூறையாடப்பட்டதுடன் சில தூதரகங்கள் தீக்கிரையாகியுமுள்ளன.

லிபியாவிற்கு எதிராக ஐ. நா. தடை நடவடிக்கைகளை அறிவித்ததை கண்டித்து ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைநகரில் வன்முறைகளில் ஈடுபட்டதுடன் பலதூதரகங்கள் மீதும் கடும்தாக்குதலை மேற்கொண்டனா.

ரஷ்ய மற்றும் வெனிசுவேலா நாட்டு தூதரகங்களே முற்றாக சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. மேலும் பல தூதரகங்களும் பலத்த சேதமடைந்துள்ளன. (சி)

## குழந்தைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் குழந்தைகள் தினம் நாளை 5ம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுமைதானத்தில் இடம் பெறவுள்ளது. (சு)

## தமிழககாவல்துறை நவீனமயப்படுத்தப்படும்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கு தமிழக காவல் துறையை நவீனமயப்படுத்தும் நோக்குடன் மத்திய அரசு தமிழகத்திற்கு பத்து கோடி ரூபாவை சிறப்பு நிதி உதவியாக வழங்கியிருக்கிறது.

மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. எம், எம். ஜேக்கப் நேற்று மக்களவையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த நிதிஉதவி வழங்கப்பட்டதாக அவா கூறினார்.

## குற்றச் செயல்கள் புரிவதில் தமிழ்நாடு முன்னணியில்

(சென்னை)

இந்தியாவில்குற்றச் செயல்கள் புரிவதில் தமிழ்நாடே தற்போது முன்னணி வகிப்பதாக மத்திய அரசின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

விபச்சாரம் புரிவதிலும், கள்ளச்சாராயம் வடிப்பதிலும் கள்ளப் பாஸ்போட் தயாரிப்பதிலும்; இந்தியாவிலுள்ள மற்றைய மாநிலங்களை காட்டிலும், தமிழ் நாடே முதலிடத்தை வகிப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே நேரத்தில் பெண்கள் மீதான பலாத்காரத்தில் இந்தியா ஆசியாவில் முதலிடத்தை வகிப்பதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

1980-ம் ஆண்டு இந்தியாவில் 5, 023 பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளதாகவும், இத்தொகை கடந்த பத்து வருடங்களில் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. ஆதாவது 1990-ம் ஆண்டு மட்டும் 10.068 பெண்கள் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. [வி)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீவீரகத்தி விநாயகர்ஆலயத்தின் கொடியேற்ற வைபவம் இன்று சனிககிழமை ஆரம்பமாகவுள்ளது. (சு)

## தவக்கால நற்சிந்தனை

தம் ஒரே பேறான மகனையே அளிக்குமளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார். அம் மகனில் விசுவாசங் கொள்ளும் எவரும் முடிவில்லா வாழ்வு பெறுவர்.

மோ. தார்சிசியஸ்

# வடபகுதி இளைஞர் தமிழகத்தில் கைது

(சென்னை)

இலங்கையின் வடபகுதியான வல்வெட்டித்துறையை சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் புதுவை மாநிலம் காரைக்கால் அருகே பொலிசாரால் அண்மையில் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கடவுச்சீட்டு மற்றும் தேவையான ஆவணங்கள் எதுவும் இன்றி வீதிகளில் நடமாடியதையடுத்து பொலிசாரால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறையிலிருந்து நாகபட்டினம் சென்று அங்கிருந்து இவர் திருச்சிக்கு சென்றதாகவும் பொலிசார் தரப்பில்தெரிவிக்கப்படுகிறது. (க)

# மணலாற்றில் ஷெல் தாக்குதல்

[வவுனியா]

மணலாற்றில் கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி ராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை முதல் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

நாயாறு, செம்மலை, அலம்பில் பகுதிகளில் இந்த ஷெல்கள் விழுகின்றன.

திங்கள், புதன் கிழமைகளில் மணலாறு காட்டுப் பகுதியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும் கடற்படைப் படகுகள் இடைக்கிடை பீரங்கி வேட்டுகளைத் தீர்த்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஊரடங்கு நீக்கம்

(வவுனியா)

வவுனியா பகுதியில் அமுல் படுத்தப்பட்ட இருநாள் ஊரடங்கு உத்தரவு இன்று சனிக்கிழமை காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று அறிவித்தது. (க)

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும், விபுலானந்தரும்'' என்றநூலறிமுகமும் ஆய்வரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்4மணிக்குகொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது. (சு)

### இந்திய அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைக் குழப்பக்கூடாது"

கிராமிய தொழிற்றுறை அமைச்சர் எம். எஸ். செல்வச்சாமி இவ்வாறு கூறினர். (க)

# 13,116 அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் தமிழகத்திலிருந்து 13,116 அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர்.

மொத்தம் 3,428 குடும்பங்கள் 19 தொகுதிகளாக நாடு திரும்பியுள்ளன.

10 தொகுதி அகதிகள் திருமலையிலும் ஏனையோர் தலைமன்னாரிலும் வந்து இறங்கியுள்ளனர்.

நாடு திரும்பியோரில் 90 வீதமானோர் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவர். (ரி)

# தமிழகத்தில் இரவு 10மணி படக்காட்சிக்கு தடை

(சென்னை)

தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னை போன்ற நகரப் பகுதிகளில் இரவு 10 மணி திரைப் படக்காட்சிக்கு தடை விதிக்கப்படவிருக்கிறது. இதனை தமிழக அரசு நேற்று அறிவித்தது.

தமிழகத்தின் பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலையடுத்து மேற்படி முடிவு எடுத்தல் அவசியமென ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அரசுக்கு பரிந்துரை செய்ததையடுத்து இந்த முடிவுஎடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# அன்னை பூபதிக்கு அஞ்சலிக் கூட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ், மாவட்ட கூட்டுறவுச் சபை அன்னை பூபதியின் நான்காவது நினைவு அஞ்சலியையொட்டி இன்று யாழ். மாவட்டத்தில் 10 இடங்களில் உண்ணாவிரதத்தையும், அஞ்சலிக் கூட்டங்களையும் நடாத்துகின்றது.

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடி, கொக்குவில் மாத்தனை முருகன் கோவிலடி, புத்தூர் சிவன் கோவிலடி, சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலடி, வழக்கம்பரை அம்மன் கோவிலடி. மிருசுவில் அர்ச். அந்தோனியார் கோவிலடி, கரணவாய் மூத்த விநாயகர் ஆலயம், மந்திகை அம்மன் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம் ஆகிய இடங்களில் இன்று காலை 9 மணி முதல் உண்ணாவிரதமும், பிற்பகல் 2மணியின் பின் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன. (வி-61)

## மாணவர் உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் மாலைநேர வகுப்புகளில் கல்வி பயிலும் காரைநகர் மாணவர்கள் தமது ஜனவரி மாத உணவுமுத்திரையை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

# மந்திகை வைத்தியசாலைக்கு மீண்டும் மின்சாரம்

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இரவில் ஒரு மணி நேரத்துக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

யுத்தம் ஆரம்பமானதையடுத்து பிரான்சு வைத்தியக் குழுவினரின் உதவியுடன் முன்னர் இரவு வேளையில் ஒரு மணி நேரத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டுவந்தது.

பின்னர் மின்சாரம் வழங்குவதற்கான ஜெனரேட்டருக்குரிய எரிபொருள் இன்மையால் சில மாதங்களாக இரவு வேளையில் மின்சாரம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது.

மீண்டும் பிரான்சு வைத்தியக் குழுவின் உதவியுடன் இரவு வேளையில் ஒரு மணி நேரத்துக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப் பட்டுவருகிறது. இதனால் வார்டுகளில் தங்கியுள்ள நோயாளர்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர். (61)

# ராஜீவ் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததை வாழப்பாடி அறிந்திருந்தார்

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தது என்பதனை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவரான வாழப்பாடி கே. ராமமூர்த்தியும் அறிந்திருந்தனர்.

ராஜீவ்காந்தி படுகொலை குறித்து விசாரித்துவரும் வர்மா கமிஷனின் அங்கத்தவர் நீதிபதி ஜே. எஸ். வர்மா நேற்று புதுடில்லியில் இத்தகவலைத் தெரிவித்தார்.

### யாழ். செயலகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிக்கிளை கைவிரித்ததைத் தொடர்ந்தே ஓய்வூதியப் பணம் பெறுபவர்களின் நன்மையைக் கருத்தில்கொண்டு யாழ். செயலகம் நேற்று 13 லட்சம் ரூபாவை இலங்கை வங்கிக்கு கடனாக வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செயலக, புனர்வாழ்வுப் பகுதியினர், உணவுப் பொருட்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பணத்தையே வங்கிக்கு கடனாக வழங்கியுள்ளதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

### ஸ்ரீலங்கா படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அதைசிதறடித்துவிட்டது. அத்துடன் படையினரின் டாங்கி எதிர்ப்பு பீரங்கியும் புலிகள் வசம் சிக்கிவிட்டது,

இதனால் டாங்கிப்படை மூலம் புலிகளை எதிர்ப்பதற்குத் தயாரிக்கப்பட்ட திட்டம் எந்த அளவிற்கு வெற்றி தரும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் கவலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக புலிகளை எதிர்ப்பதற்கு மாற்று நடவடிக்கைகளைத் தயாரிக்கும் முயற்சியில் சிறிலங்கா பாதுகாப்பு அதிகள் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## லோக்சபாவில் வெளிநடப்பு

(புதுடில்லி)

நாகலாந்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனபபடுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரகடனத்தை எதிர்த்து லோக்சபாவின் அனைத்து எதிர்க்கட்சியினரும் வெளிநடப்பு செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது. (க)

# குருநகர் உணவுக் களஞ்சியம் துரிதமாக திருத்தப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

குருநகரில் அமைந்துள்ள உணவுக்களஞ்சியங்களின் திருத்த வேலைகள் துரிதகதியில்நடைபெற்றுவருகின்றன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து லொறிகள் மூலம் கொண்டுவரப்படும் உணவுப்பொருட்கள் மேற்படி களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டுவருகிறது. (மா)

### சிறிமாவோ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிகை கடந்த வருட பிற்பகுதியில் எழுதிய ஆசிரிய தலையங்கத்திற்கு எதிராக அவர் மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்திருந்ததும் தெரிந்ததே. (சி)

## மானிய விலையில் உணவுப்பொருள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உழைக்கும் அபிவிருத்தி நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு மானிய விலையில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக நிறுஉறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

### புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி

டுள்ள, இஸ்ரேல் வெளியுறவு துணை இயக்குநர் மொறியாக் நேற்று இதனைத் தெரிவித்தார்.

இஸ்ரேலின் உளவுப்பிரிவான 'மொஸாட்' விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு உதவிபுரிகின்றது என்ற பத்திரிகைககளின் செய்தியை அவர் வன்மையாகக்கண்டித்தார்.

இதேநேரம் பயங்கரவாதத்தை ஒடுக்குவது பற்றி இந்திய அதிகாரிகளுடன்தான் எந்தவிதபேச்சுக்களும் நடாத்தவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

### தமிழ் மாணவர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினுள் இராணுவத்தினர் திடீரெனப் புகுந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் 6-ம் வகுப்பு மாணவன் செல்லத்துரை விக்கினேஸ்வரன் கொல்லப் பட்டதுடன் பல மாணவர்களும், ஆசிரியர்களும் படுகாயமடைந்தார்கள்.

அத்துடன் பாடசாலைமாணவர்கள் அங்கு தினமும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதுடன் கைதுசெய்யப்படுவதும் மாணவர்கள் காணமல்போவதும் உண்டு. இந்தச்செயல்களைக் கண்டித்தே மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை மாணவர்கள் நடத்தினார்கள்.

இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் இராணுவத்தினரின் பெரும் கெடுபிடிகளின் மத்தியிலும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினார்கள்.

இராணுவத்தினரின் அட்டூழியங்களைக் கண்டித்து சிறிலங்கா ஜனாதிபதி. பாதுகாப்பு அமைச்சு, மனித உரிமைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ. நா. பாதுகாப்புச்சபை ஆகியவற்றுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகமகஜர் ஒன்றையும் மாணவர்கள் அனுப்பிவைத்தார்கள். (வி)

### புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலசுப்பிரமணியம்(வயது-35) என்ற இளைஞரே பொலிசாரால் கைது செய்யப்பட்டவராவார்.

அரசிடம் அனுமதி பெறுமல் உண்ணாவிரதம் இருந்ததற்காகவே இவர் கைது செய்யப்பட்டதாகவும் கோவை மாவட்டம் ஆட்சி அலுவலகம் முன்னால் இவர் உண்ணாவிரதம் மேற்கொண்டதாகவும் பொலிசார் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (க)

### படையினரின்தாக்குதல்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளனர். விமானம் மற்றும் கனரக வாகனங்களும் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாகவவுனியாப் பகுதியிலேயே இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வவுனியா நகரிலிருந்து செட்டிகுளம் நோக்கி படையினர் சென்றுகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த. (சாதாரண) பரீட்சை முடிவுகள், வடமாகாணத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமும் மற்றைய மாவட்டங்களின் முடிவுகள் இன்று தபாலிலும் அனுப்பப் படுமென்று, பரீட்சை ஆணையாளர் நேற்று கொழும்பில் மேலும் தெரிவித்தார். (வி)

### கட்டுநிதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக யாழ். செயலகத்திடம் தற்காலிக கடன் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### டாங்கிகளை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிறந்த பயிற்சியைப் பெற்றுள்ளது என்று இலங்கை இராணுவத்தின் அதிகாரி ஒருவர்ஒப்புக்கொண்டுள்ளார்.

இதை விடுதலைப்புலிகள் முல்லைத்தீவுப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற சண்டையில் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள் என்றும், இராணுவ டாங்கிகளை எந்த இடத்தில் வைத்து எப்படி அழிக்கவேண்டும் என்ற யுக்தியை விடுதலைப்புலிகள் மிகவும் துணிச்சலுடன் கையாண்டுள்ளார்கள் என்றும், டாங்கிப்படைகளை அழிக்கக்கூடிய விசேட துப்பாக்கிகளையும் மேற்படி சண்டையில் விடுதலைப்புலிகள் பாவித்துள்ளார்கள் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [வி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at th General Post office Sri Lanka under Licence Number B/10336/81.